வாக்குமூலம்

தலைமை குற்றவியல் நீதிமன்றம், இராமநாதபுரம்

வழக்கு எண் S.C. No.05/2023

வழக்கு சாட்சி – PW –8

| | | | |
|---|---|---|---|
| பெயர் | :: திரு.ராமமூர்த்தி | தொழில் | :: |
| த/க பெயர் | :: முனியசாமி | வயது | :: |
| கிராமம் | :: | | |
| தாலுகா | :: | | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day of 11.11.2024.

எதிரி ஆஜர்.

**முதன்மை விசாரணை** (நேரம் : காலை 11.18 மணி)

நான் தற்போது இராமநாதபுரம் வாலாந்தரவை அம்மன்கோவில் தெருவில் குடியிருந்து வருகிறேன். அ.சா.7 செல்வம் என்பவரை தெரியும். அவர் எனது சித்தப்பா பையன். எதிரி கார்மேகத்தை தெரியும். சுமார் 2 வருடங்களுக்கு முன்பு மண்டபம் பாட்சா ஹோட்டலில் வேலை பார்த்து கொண்டிருந்தேன். அப்போது என்னுடைய சொந்த வேலையாக வாலாந்தரவைக்கு வந்திருந்தபோது கேணிக்கரை காவல் நிலையம் சென்றிருந்தேன். அப்போது போலீசார் என்னிடம் எழுதாத வெள்ளை பேப்பரில் கையெழுத்து கேட்டார்கள், போட்டு கொடுத்தேன். வழக்கு சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. என்னிடம் காட்டப்படும் எதிரி கொடுத்ததாக சொல்லப்படும் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சியில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது தான். அந்த **கையொப்பங்கள் மட்டும் முறையே அ.சா.ஆ.7 மற்றும் அ.சா.ஆ.8**. இந்த வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

(அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக அறிவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்க கோரியதன்பேரில் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது)

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை:**

போலீசார் விசாரணையில் கடந்த 05.04.2022ம் தேதி காலை 10.30 மணிக்கு கேணிக்கரை காவல் நிலைய ஆய்வாளர் இவ்வழக்கின் எதிரி கார்மேகத்தை இராமேஸ்வரம் ரோடு காரிகூட்டம் பஸ் ஸ்டாப் அருகே வைத்து கைது செய்து விசாரணை செய்தபோது எதிரி கார்மேகம் வழக்கின் குற்றத்தை ஒப்புக்கொண்டு தாமாக முன்வந்து ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் என்றும், அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின்படி அன்றையதினம் காலை 12.00 மணி முதல் 12.30 மணி வரை இராமநாதபுரம் வாலாந்தரவை காமாட்சி அம்மன் கோவில் விலக்கு சாலை பக்கம் உள்ள செடிபுதர் அருகே மறைத்து வைத்திருந்த மரக்கைபிடி போட்ட அரிவாள் ஒன்றை எடுத்து ஆஜர் செய்ததாகவும், அதை கேணிக்கரை காவல் ஆய்வாளர் அத்தாட்சியில் கைப்பற்றினார் என்றும், ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சியில் நானும், செல்வம் என்பவரும் சாட்சியாக உடனிருந்து கையொப்பம் செய்ததாக சொல்லிவிட்டு தற்போது எதிரிக்கு ஆதரவாக எதுவும் தெரியாது உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :** இல்லை.

(ஒம்/– சி.மோகன்ராம்)
தலைமை குற்றவியல் நடுவர்,
இராமநாதபுரம்.